# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:101 ★12.08.2026 ★தமிழ் நாளிதழ் ★புதன்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:101 ★12.08.2026 ★TamilDaily ★Wednesday ★Page-4 ★Price-₹5/- Chennai



தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779


## நீட் தேர்வு ரத்து, வெளிநாட்டு நன்கொடை திருத்த மசோதாவுக்கு எதிர்ப்பு: பேரவையில் தனித் தீர்மானங்கள் நிறைவேற்றம்

சென்னை,ஆக.12

தமிழக சட்டப்பேரவையில் நீட் தேர்வை ரத்து செய்ய கோரும் தனித் தீர்மானம், வெளிநாட்டு நன்கொடை திருத்த மசோதாவை எதிர்க்கும் தீர்மானம் ஆகியவை நிறைவேற்றப்பட்டன.

தமிழகசட்டப்பேரவை நேற்று காலை கூடியதும் சுகாதாரத் துறை அமைச்சர்அருண்ராஜ், நீட் தேர்வு தொடர்பான தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசினார். அப்போது அவர் பேசியதாவது: நீட் தேர்வு சமூக நீதி, சமத்துவம் மற்றும் மாநிலங்களின் உரிமைகளுக்கு எதிரானது. தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணவர்கள், கிராமப்புற மற்றும் சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களின் மருத்துவக் கல்வி வாய்ப்புகளை இத்தேர்வு முறை பெரிதும் பாதிக்கிறது.

ஒரு மாணவர் 12 ஆண்டுகள் பள்ளியில் கற்ற கல்வியை விட, ஒரே நாளில் நடைபெறும்ஒருதேர்வே அவரது எதிர்காலத்தை தீர்மானிக்கக் கூடாது. இது கல்வியின் உண்மையான நோக்கத்துக்கும், பள்ளி கல்வியின் மதிப்புக்கும் முரணானது.

நீட் தேர்வு நடைமுறையில், தனியார் பயிற்சி மையங்கள்தான் பெரிதும் பயன்பெறுகின்றன. சமூக நீதியைப் பாதிக்கும், சம வாய்ப்பைக் குறைக்கும், மாநிலங்களின் தனித்துவத்தைப் புறக்கணிக்கும் எந்த ஒரு முயற்சியையும் எந்த ஒரு தேர்வையும் ஏற்க முடியாது என்பதே இந்த அரசின் நிலைப்பாடு.

தமிழகம் பல ஆண்டுகளாக 12ம் வகுப்பு பொதுத் தேர்வு மதிப்பெண்களின்அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி, நாட்டிலேயே முன்னோடியான பொது சுகாதார அமைப்பை உருவாக்கியுள்ளது.

எனவே மத்திய சட்டங்களில் தேவையான திருத்தங்களை மேற்கொண்டு, நீட் நுழைவு தேர்வு முறையை ரத்து செய்து, 12 ம் வகுப்பு பொதுத் தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் மாநில அரசே மருத்துவ மாணவர் சேர்க்கையை நடத்தி கொள்ள வழி வகை செய்ய வேண்டும். நீட் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு, கல்வியைப் பொதுப் பட்டியலில் இருந்து மாநில பட்டியலுக்கு மாற்றுவது தான். இந்த தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பின்னர் இந்த தீர்மானத்தின் மீது பொதுப் பணித் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், உயர் கல்வித் துறை அமைச்சர் விஸ்வநாதன், ஏ.வ.வேலு (திமுக) உட்பட உறுப்பினர்கள் பலர் ஆதரவாகப் பேசினர். மேலும், வி. முத்துராஜா (திமுக), ஓ.எஸ்.மணியன் (அதிமுக), டி. ராமச்சந்திரன் (இ.கம்யூ), ஆர்.செல்லசுவாமி (மார்க்சிஸ்ட்), சவுமியாஅன்புமணி(பாமக) ஆகியோர் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். பாஜக எம்எல்ஏ போஜராஜன் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்தார். இதையடுத்து, குரல் வாக்கெடுப்பு மூலம் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியதாக பேரவைத் தலைவர் ஜேசிடி. பிரபாகர் அறிவித்தார்.

எஃப்சிஆர்ஏ மசோதா: இதேபோல், வெளிநாட்டு நன்கொடை ஒழுங்குமுறை சட்ட (எஃப்சிஆர்ஏ) திருத்த மசோதாவை மத்திய அரசு திரும்பப் பெறக் கோரி, தமிழக சட்டப் பேரவையில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் நேற்று தனித்தீர்மானம்கொண்டு வந்தார். அப்போது அவர் பேசும் போது, ‘‘எஃப்சி ஆர்ஏ விதிமுறைகள் தொண்டு நிறுவனங்களின் தன்னாட்சியையும், சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களின் செயல்பாட்டையும் பாதிக்கும். இந்தச்சட்டத்தால் சிறுபான்மையினர் பாதிக்கப்படுவார்கள். இந்த மசோதாவை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும். இந்த மசோதா தொடர்பாக



மாநில அரசுகளுடன் மத்தியஅரசுவிரிவாகஆலோசனைநடத்த வேண்டும்’’ என்றார்.

இதைத்தொடர்ந்து இத்தீர்மானத்தின் மீது உறுப்பினர்கள் பேசியதாவது:

அமைச்சர் ஏ.எம்.ஷாஜகான் : தொண்டு நிறுவனங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள் நடத்தப்படுவது பாதிக்கப்படும். இந்தச் சட்டம், சிறுபான்மையினரை முடக்கும் முயற்சியாகும். அமைச்சர் வன்னியரசு: முதலில் சிஏஏ கொண்டுவந்து முஸ்லிம்களை 2ம் தர குடிமக்கள் ஆக்கினார்கள். தற்போது எஃப்சிஆர்ஏ மூலம் கிறிஸ்தவர்களை குறிவைத்துள்ளனர். கிறிஸ்தவக் கல்வி நிறுவனங்களை அபகரிக்க மத்திய அரசு முயற்சி செய்கிறது.

எஸ்.ஆஸ்டின்(திமுக): இந்த மசோதாவை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று எங்கள் கட்சியின்தலைவர்ஸ்டாலின் ஆரம்பத்தில் இருந்தே வலியுறுத்தி வருகிறார். இந்தச் சட்டத்தால், சிறுபான்மையினரின் சொத்துகளைப் பறிமுதல் செய்ய முடியும். தொண்டு நிறுவனங்களின் உரிமை பறிபோகும்.

அக்ரி கிருஷ்ணமூர்த்தி (அதிமுக): எஃப்சிஆர்ஏ சட்டத்தை வரவேற்கும் அதே நேரத்தில், சிறுபான்மையினரைப் பாதுகாக்க தேவையான திருத்தங்களைச் செய்து இந்த மசோதாவை நிறைவேற்றவேண்டும்.வெளிநாட்டு நிதி மீதான கட்டுப்பாடுகளை வரவேற்கிறோம்.

எம். போஜராஜன் (பாஜக): தற்போது இருக்கும் சட்டத்தில் சில திருத்தங்கள், மாற்றங்களை செய்ய வேண்டியுள்ளது. தேசத்துக்கு எதிரான செயல்களைத் தடுக்கும் நோக்கில்தான் இந்த சட்டம் கொண்டு வரப்படுகிறது. எனவே. எப்சிஆர்ஏ அவசியம் தேவை.

எம்.எச். ஜவாஹிருல்லா (மமக): வெளிநாடுகளில் இருந்து பணம் வருகிறது என்றால் அது பிரத்யேக வங்கிக் கணக்கு வாயிலாகத் தான் வரும். எனவே, இந்த நிதியைக் கண்காணிக்கலாம். எஃப்சிஆர்ஏ சட்டம் சிறுபான்மையின மக்களை மட்டுமல்ல; கல்வி, மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரையும் பாதிக்கும்.

தொடர்ந்து ஆர்.செல்லசுவாமி (மார்க்சிஸ்ட்), கே. மாரிமுத்து (இந்திய கம்யூனிஸ்ட்), பிரேமலதா விஜயகாந்த் (தேமுதிக) ஆகியோர் தீர்மானத்தை ஆதரித்து பேசினர்.

தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பாஜக உறுப்பினர் வெளிநடப்பு செய்தார். அதைத் தொடர்ந்து குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு இத்தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியதாக பேரவைத் தலைவர் ஜேசிடி. பிரபாகர் அறிவித்தார்.

## "கம்பம்" பகுதிக்கு மட்டுமே சட்டமன்ற உறுப்பினரா? தொகுதி மக்களும் சமூக ஆர்வலர்களும் கேள்வி

தேனி மாவட்டம், கம்பம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் உத்தமபாளையம் தாலுகாவிற்கு கீழ் வரும் கம்பம் மற்றும் சின்னமனூர் ஆகிய இரண்டு நகராட்சிகளும், உத்தமபாளையம், தேவாரம், பண்ணைப்புரம், கோம்பை, அனுமந்தன்பட்டி, க. புதுப்பட்டி, காமயகவுண்டன்பட்டி, ஓடைப்பட்டி ஆகிய பேரூராட்சிகளும், 12க்கும் மேற்பட்ட வருவாய் கிராமங்களும் அமைந்துள்ளன. இவ்வளவுபரந்துவிரிந்தபகுதிகளைகொண்ட இந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரான பி.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா, தொடர்ந்து கம்பம் நகராட்சி பகுதிக்குள்ளேயே மட்டுமே ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருவதாக தொகுதி மக்களும் சமூக ஆர்வலர்களும் கடும் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர். கம்பம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கு உட்பட்ட அனைத்து பகுதி மேடைகளிலும் பேசும்போது "சட்டமன்றத் தொகுதி" என்று குறிப்பிட்டாலும், நடைமுறையில் கம்பம் பகுதியை விட்டு வெளியே வந்து பிற பகுதிகளில் ஆய்வு செய்வதில்லை என்று பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர். கம்பம் பகுதி தனது சொந்த ஊர் என்பதால் அப்பகுதியிலேயே சுழன்று வரும் அவர், சின்னமனூர் நகராட்சி பகுதி சட்டமன்ற உறுப்பினரின் கட்டுப்பாட்டில் இருந்து நீக்கப்பட்டுவிட்டதா என்ற கேள்வியை எழுப்பும் அளவுக்கு புறக்கணித்து வருகிறார். சின்னமனூர் நகர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் சாக்கடை அமைக்கும் பணிகள், கட்டிட ஒப்பந்த பணிகள் அனைத்தும் மந்த நிலையிலும் அரைகுறையாகவும் நடந்து வருகின்றன. மேலும், சில நியாயவிலைக் கடைகளில் பல்வேறு சிக்கல்கள் நீடிப்பதோடு, அரசு அலுவலகங்களிலும் பல்வேறு முறைகேடுகள் தொடர்ந்து அரங்கேறி வருகின்றன. இத்தகைய சூழலில், தொகுதிக்குட்பட்ட பிற பகுதிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமல் சுணக்கம் காட்டுவது ஏன் என்ற கேள்வி வலுத்து வருகிறது. தன்னுடைய சொந்த தொகுதியிலேயே இன்னும் செல்ல வேண்டிய ஊர்களும், சீரமைக்க வேண்டிய சமூக பிரச்சினைகளும் ஏராளமாக இருக்கும் வேளையில், சட்டமன்ற உறுப்பினர் தனது எல்லைக்குட்பட்ட அரசு அலுவலகங்களை நேரடியாக ஆய்வு செய்வதை விடுத்து, பிற தொகுதிகளின் பிரச்சினைகளில் தலையிட்டு வருகிறார் என்ற விமர்சனமும் எழுந்துள்ளது. தன்னுடைய பகுதியில் பல பிரம்மாண்டங்களை உடனடியாக செய்து காட்டி, அதை ஊடக வெளிச்சத்தில் பெரிய செய்தியாக காட்டிக் கொள்வதில் காட்டும் ஆர்வத்தை, தொகுதியின் கடைக்கோடி கிராமங்களுக்கும் காட்ட வேண்டும் என்பதே தொகுதி மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. சட்டமன்ற உறுப்பினர் ஆய்வுப் பணிகளை செய்வது வரவேற்கத்தக்கது என்றாலும், அவர் இதுவரை வராதஊர்களுக்குஉடனடியாகவருகை தந்து அப்பகுதி மக்களின் குறைகளை கேட்டறிய வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். எனவே, சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா, இனிவரும் நாட்களில் திட்டமிட்ட வகையில் ஒரு கால அட்டவணையை தயார் செய்து, ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட நாட்களில் நகராட்சி பகுதிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி கிராமங்களுக்கு சென்று ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். அனைத்து அரசு அலுவலகங்களிலும் "திடீர் ஆய்வு" மேற்கொண்டு குறைகளை கண்டுபிடிப்பதை மட்டுமே நோக்கமாக கொள்ளாமல், முறையான திட்டமிடலோடு நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை திருப்திகரமாக முடித்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பிட்ட சில ஊடகவியலாளர்களைமட்டும்உடன்அழைத்து செல்லாமல், கம்பம் தொகுதிக்கு உட்பட்ட அனைத்து பகுதி மக்களுக்கும் பொதுவான பிரதிநிதியாக செயல்பட்டு, அனைத்து பகுதிகளின் வளர்ச்சியிலும் சமமான கவனம் செலுத்த வேண்டும் என்பதே பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் முதன்மையான கோரிக்கையாக உள்ளது.

## காவிரியில் தமிழகத்துக்கு 15 நாட்களுக்கு 12 ஆயிரம் கனஅடி நீர் திறக்க உத்தரவு

காவிரியில் இருந்து தமிழகத்துக்கு 15 நாட்களுக்கு தினமும் 12 ஆயிரம் கன அடி நீரை கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும் என்று காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஜூலை 28ம் தேதி நடந்த காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுக் கூட்டத்தில் தமிழகத்துக்கு 15 நாட்களுக்கு தினமும் 3,500 கன அடி நீரை திறந்து விட கர்நாடகாவுக்கு உத்தரவிடப்பட்டது. ஆனால், தமிழகத்துக்கு நீர் திறக்கப்படவில்லை.

இந்தச் சூழ்நிலையில் காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுக் கூட்டத்தின் 140வது கூட்டம் டெல்லியில் அதன் தலைவர் வினீத் குப்தா தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி மாநிலங்களைச் சேர்ந்த நீர்ப்பாசனத் துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

தமிழக அரசின் தரப்பில், “உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படி கர்நாடக அரசு காவிரியில் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நீரை மாதவாரியாக முறையாக வழங்கவில்லை.

இதனால் மேட்டூர் அணையில் பாசனத்துக்காகத் திறக்கும் அளவுக்கு நீர் இருப்பு இல்லை. ஆகஸ்ட் மாத தொடக்கத்தில் இருந்தே காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கன மழைபெய்கிறது.எனவே கர்நாடக அரசு தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நிலுவை நீரை திறந்துவிட உத்தரவிட வேண்டும்” என்று வலியுறுத்தப்பட்டது. கர்நாடகா மறுப்பு: அதற்கு கர்நாடக அரசின் தரப்பில், “கர்நாடகாவில் நிகழாண்டில் தென் மேற்கு பருவ மழை பொய்த்ததால் கிருஷ்ணராஜ சாகர், கபினி, ஹாரங்கி, ஹேமாவதி ஆகிய அணைகளுக்கு போதிய நீர் வரவில்லை.

கடந்த இரு வாரங்களாகக் கணிசமாக மழை பொழிந்ததால் கபினி, ஹாரங்கி ஆகிய அணைகள் முழு கொள்ளளவை நெருங்கியுள்ளன.

தற்போது கிருஷ்ணராஜ சாகர், கபினி உள்ளிட்ட 4 அணைகளிலும் சேர்த்து 77.746 டிஎம்சி நீர் இருப்பில் உள்ளது. இந்த அளவானது கடந்த 30 ஆண்டுகளில் இருந்த நீரின் அளவைவிட 47 சதவீதம் குறைவானது. இந்த நிலையில் தமிழகத்துக்கு நிலுவை நீரை முழுவதுமாக திறக்க இயலாது” என்று தெரிவிக்கப்பட்டது.

இதனை ஏற்க மறுத்த காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுத்தலைவர், “உச்சநீதிமன்றத்தின் உத்தரவின்படி தமிழகத்துக்குக் காவிரி நீரை திறந்து

விட கர்நாடகா முன்வர வேண்டும். தமிழகத்துக்கு அடுத்த 15 நாட்களுக்கு தினமும் 12 ஆயிரம் கன அடி நீரை திறந்து விட வேண்டும். இதனை ஆகஸ்ட் 13ம் தேதி காலை 8 மணி முதல் இரு மாநில எல்லையான பிலிகுண்டுலு அளவீட்டு நிலையத்தில் இருந்து தமிழகத்துக்கு நீர் செல்வதை உறுதி செய்ய வேண்டும்” என்று பரிந்துரைத்தார்.

இந் நிலையில், காவிரி மேலாண்மை ஆணைய கூட்டம், அதன் தலைவர் ஹல்தார் தலைமையில் டெல்லியில் நேற்று நடந்தது. அப்போது, காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் பரிந்துரையை ஏற்று தமிழகத்துக்கு 15 நாட்களுக்கு 12 ஆயிரம் கன அடி நீர் திறக்க கர்நாடக அரசுக்கு ஆணையம் உத்தரவிட்டது.

### மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன் தலைமையில்

## தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கான உயர்கல்வி சேர்க்கை சிறப்பு முகாம்

தேனி,ஆக.12

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் இன்று (11.08.2026) 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கான உயர்கல்வி சேர்க்கை சிறப்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

கல்வியின் முக்கியத்துவம் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு கல்வி வளர்ச்சி சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதுமட்டுமல்லாமல் கல்வி கற்பதற்கு பொருளாதாரம் ஒருபோதும் தடையாக ஒருபோதும் இருந்துவிடக்கூடாது என்பதற்காக மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு முன்முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. ஆகையால் ஒவ்வொரு மாணவர்களும் தொடர்ந்து பள்ளிக்கல்விபயின்றுபிறகுஇடைவிடாமல் உயர் கல்வியும் பயின்று வாழ்க்கையில் ஒரு உயர்ந்த இடத்திற்கு வரவேண்டும். மாணவர்களாகிய நீங்கள் கல்வி கற்பதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதற்கு மாவட்ட நிர்வாகம் தயாராக உள்ளது. அதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். எனவே இன்றையதினம் இங்கு வருகை தந்துள்ள 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தங்களது கல்வித்தகுதி மற்றும் விருப்பத்திற்கேற்ப உயர்கல்வியைத் தேர்வுசெய்து, கல்லூரிகளில் சேர்ந்து பயன்பெற வேண்டும். மேலும், தேர்ச்சி பெறாத மாணவர்கள் மனம் தளராமல், துணைத்தேர்வு, திறந்தநிலைக் கல்வி, தொழிற்கல்வி உள்ளிட்ட மாற்று கல்வி வாய்ப்புகளைப் பயன்படுத்தி தங்களது கல்வியைத் தொடர்ந்து பயில வேண்டும். மாணவர்களின் எதிர்கால கல்வி மற்றும் வேலைவாய்ப்பை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு உரிய உயர்கல்வி வாய்ப்புகள் மற்றும் அரசின் கல்வி உதவித்திட்டங்கள் குறித்தும் இச்சிறப்பு முகாமில்எடுத்துரைக்கப்படும்.எனவே, மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இவ்வாய்ப்பினை முழுமையாக பயன்படுத்திக் கொண்டு, தங்களது எதிர்காலத்தை சிறப்பாக அமைத்துக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

### கருங்குளம் வடக்கு ஒன்றிய தவெக கட்சி ஆலோசனை கூட்டத்தில்

# கட்சி வளர்ச்சி பணிகள் செய்வது குறித்து சிறுகுறு தொழில் துறை அமைச்சர் மதன் ராஜா நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கினார்

கருங்குளம் வடக்கு ஒன்றிய தவெக கட்சி ஆலோசனைகூட்டத்தில் கட்சி வளர்ச்சி பணிகள் செய்வது குறித்து சிறுகுறு தொழில் துறை அமைச்சர் மதன் ராஜா நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கினார்,

ஒட்டப்பிடாரம் அக் 12.தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் ஆணைக்கேற்ப தூத்துக்குடி புறநகர் மாவட்ட தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் கருங்குளம் வடக்கு ஒன்றியம் மற்றும் அதன்கிளைகழக நிர்வாகிகளு க்கான கட்சி வளர்ச்சிகள் மற்றும் மக்கள்பணி செய்வது குறித்த ஆலோசனைக் கூட்டம் கருங்குளம் வடக்கு ஒன்றிய செயலாளர் முத்துகிரு ஷ்ணன் ஏற்பாட்டில்நடைபெற்றது இதில் புறநகர் மாவட்ட செயலாளரும் தமிழக சிறு குறு தொழில் துறை அமைச்சருமான மதன் ராஜா கலந்து கொண்டு தவெக கட்சி நிர்வாகிகளுக்கு சிறப்பான ஆலோசனைகளை வழங்கினார்,

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வளர்ச்சிக்கு சிறப்பாக பணியாற்றி வரும் சிறு குறு தொழில் துறை அமைச்சர் மதன் ராஜாவுக்கு கருங்குளம் வடக்கு ஒன்றிய செயலாளர்G.முத்துகிரு ஷ்ணன், உட்பட கட்சி நிர்வாகிகள் சால்வை இணைத்து வாழ்த்து கூறினார்

இந்நிகழ்ச்சியில் கருங்குளம் வடக்கு ஒன்றிய தவெக இணைச்செயலாளமாரியப்பன், பொருளாளர் முத்து க்குமார்,துணைச்செயலாளர்கள்பேச்சிமுத்து , சிவசண்முகம், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் S.பண்டாரபா ண்டியன் , வல்லநாடு கிளைசெயலாளர் மெர்சல் மணி, கருங்குளம் வடக்கு ஒன்றிய ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் பாக்கியலட்சுமி,ஒன்றிய இளம்பெண்கள் அணி அமைப்பாளர் கவிதா ,தூத்துக்குடி புறநகர் மாவட்ட இளம் பெண்கள் இணை அமைப்பாளர் கோமதிசெல்வி ,, ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் வெங்கடேஷ்,மாவட்ட இளைஞர் அணி இணை அமைப்பாளர் அங்கப்பன்,மாவட்ட தொண்டரணி இணை அமைப்பாளர்பேச்சிமுத்து, கிளைச் செயலாளர் லட்சுமி பிரியா,மற்றும் தவெக கட்சி கழக கிளைசெயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள்கலந்துகொ ண்டனர்.



# "ஊடக" பாகுபாடும் "ரீல்ஸ்" மோகமும்" கம்பம் எம்.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ராவுக்கு பத்திரிகையாளர்களின் பகிரங்க கண்டனம்

கம்பம்,ஆக.12

கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா, தனது ஆய்வு பணிகளை ஊடகங்களில் விளம்பரப்படு த்துவதில் காட்டும் கவனத்தை, பத்திரிகையாளர்களை சமமாக நடத்துவதில் காட்டத் தவறிவி ட்டதாக பரவலான குற்றச்சா ட்டுகள் எழுந்துள்ளன. அண்மையில் நியாயவிலை கடையில் தனது சொந்த வீட்டின் தராசை கொண்டு சென்று ஆய்வு மேற்கொண்ட அவர், அங்குள்ள எடை குறைபாட்டை சுட்டிக்காட்டிய விதம் பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. அரசு சட்ட திட்டங்களின்படி முத்திரையிடப்பட்ட தராசுகளை பயன்படுத்தாமல், தனது வீட்டில் உள்ள சொந்த தராசைக் கொண்டு சென்று ஆய்வு செய்ததை சமூக ஆர்வலர்கள் பலரும் கேள்விக்குள்ளாக்கியுள்ளனர்.

"பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பில் ஏலக்காய் வியாபாரம் மற்றும் சொத்துக்கள்" வைத்துள்ள ஒருவரது சொந்த தராசின் உண்மைத்தன்மை என்ன என்பது குறித்து பொதுமக்கள் மத்தியில் சந்தேகங்கள் எழும் அதேவேளையில், இது போன்ற ஆய்வுகளின் போது எளிய கடைநிலை பெண் ஊழியர்களை சட்டமன்ற உறுப்பினர் என்ற அதிகார தோரணையில் ஒருமையில் பேசி சித்ரவதை செய்வதாகவும் நியாயவிலை கடைகளின் சங்கத்தினர் வேதனை தெரிவிக்கின்றனர். உயர் மட்ட லஞ்ச ஊழல்களையோ, பெரு நிறுவனங்களின் தவறுதலையோ தட்டிக்கேட்க துணியாத எம்.எல்.ஏ., தினக்கூலிகளாகவும் எளிய ஊழியர்களாகவும் இருக்கும் அன்றாடங்காய்ச்சிகளிடம் மட்டுமே தனது அதிகாரத்தை காட்டுகிறார் என்ற ஆதங்கமும் வலுத்துள்ளது. தினமும் ஏதாவது ஒரு விசயத்தை வைத்து சமூக வலைதளங்களில் 'ரீல்ஸ்' போட்டு தன்னைத் தானே பிரபலப்ப டுத்திக் கொள்ளும் மோகத்தில், குறிப்பிட்ட சில ஊடகவியலாளர்களை மட்டும் அழைத்துச் சென்று நாடகமாடுவதாகவும், மற்ற பத்திரிகை யாளர்களுக்கு தவறான தகவல்களை பரப்புவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. குறிப்பாக, தேனி மற்றும் சின்னமனூர் பகுதியை சேர்ந்த நிருபர்கள் கம்பம் தொகுதிக்குள் செய்தி சேகரிக்க வரக்கூடாது எனத் தடை விதிப்பதும், செய்திகளை பகிர்வதில் சுணக்கம் காட்டு வதும் ஜனநாயக பண்புகளுக்கு முற்றிலும் எதிரானது. ஒரு சில ஊடகங்களுக்கு மட்டும் தனி வாட்ஸ்அப் குழு அமைத்து, தனக்கு ஆதரவான செய்திகளை மட்டும் பரப்ப சொல்லும் எம்.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ராவின் இந்த நடவடிக்கை ஊடகத்துறையினரிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஜனநாயகத்தின் நான்காம் தூணாக விளங்கும் பத்திரிகையாளர்களை தன்னுடைய விளம்பரத் தேவைக்காக பாகுபாடு பார்த்து பிரிப்பதை தவிர்த்து, அனைத்து ஊடகங்களையும் சமமாக நடத்த வேண்டும் என்பதே ஒட்டுமொத்தப் பத்திரிகையாளர்களின் நியாயமான ஆதங்கமும் கோரிக்கையுமாக உள்ளது.

### பாடியநல்லூரில்

# ரியல் பிரண்ட்ஸ் ஸ்போர்ட்டிங் கிளப் சார்பில் 12ஆம் ஆண்டாக இன்னிசை கச்சேரி



செங்குன்றம், ஆக12:

மாதவரம் தொகுதி சோழவரம் ஊராட்சி ஒன்றியம் பாடியநல்லூர் அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் ஆலய 84ஆம் ஆண்டு தீமிதி திருவிழாவை முன்னிட்டு ரியல் பிரண்ட்ஸ் ஸ்போர்ட்டிங் கிளப் சார்பில் 12ஆம் ஆண்டு வெற்றிப் படைப்பாக திலீப் வழங்கிய சசி ரிதம்ஸ் இன்னிசை கச்சேரி நிகழ்ச்சி ஜீவா மற்றும் நண்பர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

முன்னதாக ஆலய நிர்வாகிகள் சிறப்பு அழைப்பாளர்களுக்கு பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதில் ஆலய பொறுப்பாளர்கள், ரியல் பிரண்ட்ஸ் ஸ்போர்ட்டிங் கிளப் நிர்வாகிகள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.





### பக்தர்கள் மனவேதனை:

# பழனி திருஆவினன்குடி கோயிலில் ஊழியரின் அநாகரிக நடத்தை

## நிர்வாகம் நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

பழனிமுருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடான பழனி அருள்மிகு திருஆவினன்குடி திருக்கோயிலுக்கு தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் மனநிம்மதி வேண்டியும், தங்கள் கஷ்டங்களைப் போக்கவும் சுவாமி தரிசனம் செய்ய வருகை தருகின்றனர். இந்நிலையில், அங்குள்ள கோயில் அர்ச்சகர் ஒருவர், கோயிலுக்கு வரும் பக்தர்களிடம் வா போ என்று நடந்து கொள்வதாகப் பொது மக்கள் மற்றும் பக்தர்களிடையே பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.தூரத்து ஊர்களிலிருந்தும், மனநிறைவோடும் பக்தியோடும் வரும் பக்தர்களை "வா, போ" என்று ஏளனமாக ஒருமையில் பேசி அவமதிப்பது. பக்தர்கள் அன்போடு கொடுக்கும் பூக்களைப் பெற்றுக் கொள்ளாமல் தூக்கி எறிவதும், கையில் கொடுக்க வேண்டிய புனிதமான திருநீறை பக்தர்களின் கைகளில் வீசி எறிவதும் தொடர்கதையாகி உள்ளது. காணிக்கை பக்தர்கள் தங்கள் விருப்பத்தின் பேரில் செலுத்தும் காணிக்கையைத் தாண்டி, கட்டாயப்படுத்தி காணிக்கை போடச் சொல்லி வற்புறுத்துவது. "மனநிறைவோடு இறைவனைத் தேடி வரும் பக்தர்களிடம் திருநீறைத் தூக்கி எறிவதற்கும், அவர்களை ஒருமையில் பேசி அவமதிப்பதற்கும் இவருக்கு யார் அதிகாரம் கொடுத்தது ?" எனக் கோயிலுக்கு வரும் பக்தர்கள் வேதனையுடன் கேள்வி எழுப்புகின்றனர். இவர்மீது பக்தர்கள் மட்டுமன்றி, உடன் பணிபுரியும் சக கோயில் ஊழியர்களும் பல்வேறு புகார்களைத் தெரிவித்து வருகின்றனர். இவருடைய இத்தகைய செயல், கோயிலின் புனிதத்தையும், நிர்வாகத்தின் பெயரையும் சீர்குலைக்கும் வகையில் உள்ளது. இணை ஆணையருக்குக் கோரிக்கை: எனவே, பக்தர்களின் மன உணர்வுகளைப் புண்படுத்தும் வகையிலும், தெய்வ வழிபாட்டிற்கு இடையூறாகவும் நடந்து கொள்ளும் இந்த நபரை, கோவில் நிர்வாக இணை ஆணையர் (JOINT COMMISSIONER) உடனடியாக நேரில் அழைத்து கடுமையாகக் கண்டிக்க வேண்டும் பக்தர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# திண்டுக்கல்லில் விபச்சாரத்தில் ஈடுபட்ட ஒரு அழகி மீட்பு; புரோக்கர்கள் கணவன் மனைவி கைது: புல்லட், கார் பறிமுதல்

திண்டுக்கல், ஆக.12

திண்டுக்கல்லில் விபச்சாரம் நடைபெறுவதாக நகர்DSP.கார்த்திக் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில்திண்டுக்கல் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ரெய்கானா தலைமையில் சார்பு ஆய்வாளர்கள் பிரபாகரன், அனுசுயா மற்றும் காவலர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த போதுMSP.பள்ளி எதிரே குமரன் திருநகர் 2 தெரு பகுதியில் வீடு வாடகைக்கு பிடித்து விபச்சாரம் நடத்தியது தெரியவந்ததை தொடர்ந்து போலீசார் அந்த வீட்டில் இருந்து ஒரு அழகியை மீட்டு புரோக்கர்களாக செயல்பட்ட குமரன் திருநகரை சேர்ந்த செல்வகுமார்(34) மற்றும் அவரது மனைவி சைலஜா(30) ஆகிய 2 பேரை கைது செய்து அவர்களிடமிருந்து புல்லட் மற்றும் கார் ஆகியவற்றை பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்



பழநி பெரியநாயகியம்மன் கோயிலில் ஆடி லட்சார்ச்சனை நிறைவை முன்னிட்டு நேற்று சிறப்பு வேள்வி நடைபெற்றது. பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் உப கோயிலான பெரியநாயகியம்மன் கோயிலில் ஆடி மாதம் லட்சார்ச்சனை விழா நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு ஜூலை 17ம் தேதி முதல் ஆக.10 வரை தினமும் மாலையில் அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் மற்றும் நூறாயிரம் மலர்கள் தூவி ஆடி லட்சார்ச்சனை நடைபெற்றது. நிறைவு நாளான நேற்று கணபதி ஹோமம், கஜ பூஜை, கோ பூஜை,சுமங்கலிபூஜைமற்றும்ஆடிலட்சார்ச்சனை சிறப்பு வேள்வி நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். முன்னதாக, பெரியநாயகியம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் ஆராதனைகள் நடைபெற்றன. வரும் ஆக.14ம் தேதி ஆடி மாத கடைசி வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு உச்சிக்காலத்தில் மகா அபிஷேகம், மாலையில் அம்மனுக்கு தங்கக்கவச அலங்காரம் நடைபெற உள்ளது. அன்று இரவு 8.30 மணிக்கு மேல் வெள்ளித் தேரோட்டம் நடைபெற உள்ளது

# "போதையில்லா தமிழ்நாடு" உறுதிமொழி: திருவண்ணாமலையில் 2.86 லட்சம் பேர் பங்கேற்பு

திருவண்ணாமலை, ஆக.12

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் சென்னை மாநிலக் கல்லூரி அரங்கில் நடைபெற்ற "போதையில்லா தமிழ்நாடு – DRUG FREE TAMIL NADU" மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி, திருவண்ணாமலை மாவட்டத்திலும் நேரலையாக ஒளிபரப்பப்பட்டது.

திருவண்ணாமலை கலைஞர் கருணாநிதி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நேரலை நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தலைமையில் 1,200க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்று போதைப்பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், இளைஞர்களை போதைப்பழக்கத்தில் இருந்து பாதுகாக்கவும் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக நடைபெற்ற இந்த உறுதிமொழி நிகழ்ச்சியில், போதைப்பொருள் உற்பத்தி, பயன்பாடு மற்றும் நுகர்வை தடுக்க அரசுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக மாணவர்கள் உறுதியேற்றனர். மேலும், தங்களது குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் போதைப்பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுப்பதுடன், போதைப்பழக்கத்தில் இருந்து மீள்பவர்களுக்கு ஆதரவளிப்பதாகவும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

திருவண்ணாமலை மாவட்டம் முழுவதும் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் 434 பேர், உயர்கல்வித்துறை சார்பில் 12,870 பேர், பள்ளிகளில் 2,70,330 மாணவ, மாணவிகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 370 பேர் மற்றும் பிற துறைகளைச் சேர்ந்த 2,542 பேர் என மொத்தம் 2,86,546 பேர் நேரலை நிகழ்ச்சியின் போது போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், மாவட்ட சமூக நல அலுவலர் கோமதி, மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் பானு சுஜாதா, உதவி ஆணையர் (கலால்) வளர்மதி, துணை காவல் கண்காணிப்பாளர் (மதுவிலக்கு மற்றும் அமலாக்கம்) செந்தில்குமார், கலைஞர் கருணாநிதி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் ரேவதி, கோட்ட கலால் அலுவலர் சௌந்தரராஜன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.





### திருவண்ணாமலை மாநகராட்சி விரிவாக்கத்திற்கு எதிர்ப்பு:

# 18 கிராமங்களைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர் கலெக்டர் அலுவலகம் முற்றுகை

திருவண்ணாமலை, ஆக.12

திருவண்ணாமலை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 18 கிராம ஊராட்சிகளை மீண்டும் கிராம ஊராட்சிகளாக செயல்பட



அனுமதிக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, 18கிராமங்களைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவண்ணாமலை மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தின் கீழ் மலப்பாம்பாடி, நொச்சிமலை, துர்க்கை நம்மியந்தல், தேவனந்தல், சோ.கீழ்நாச்சிபட்டு, கீழ்கச்சராப்பட்டு, ஏந்தல், சின்னகாங்கேயனூர், நல்லவன்பாளையம், மேலத்திக்கண், அத்தியந்தல், வேங்கிக்கால், ஆணாய்பிறந்தான், காவேரிபூண்டி, தென்மாத்தூர், அடிஅண்ணாமலை, ஆடையூர், சாவல்பூண்டி ஆகிய 18 கிராமங்கள் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த கிராமங்கள் பெரும்பாலும் விவசாயத்தை பிரதான தொழிலாகக் கொண்டுள்ள நிலையில், மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பின்னர் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர். குறிப்பாக, கிராமப்புற மக்களுக்கு முக்கிய வாழ்வாதாரமாக இருந்த மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டமான 100 நாள் வேலை வாய்ப்பு கிடைக்காததால், கூலித்தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கூறினர். மேலும், மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பிறகு வீட்டு வரி, குடிநீர் கட்டணம் மற்றும் புதிய குடிநீர் இணைப்புக்கான கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளதாகவும், போதிய நகர்ப்புற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படாத நிலையில் கூடுதல் வரிச்சுமை விதிக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டினர். இதனால் விவசாயிகள், கூலித்தொழிலாளர்கள் உள்ளிட்ட அடித்தட்டு மக்களின் பொருளாதார நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர்கள், மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என வலியுறுத்தினர். பின்னர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கோரிக்கை மனு அளித்த பொதுமக்கள், மக்களின் கருத்தை கேட்காமல் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 18 கிராமங்களையும் மீண்டும் பழையபடி கிராம ஊராட்சிகளாக செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இந்தப் பிரச்சினைக்கு அரசு உடனடியாக தீர்வு காணாவிட்டால், அடுத்தகட்டமாக அனைத்து கிராம மக்களையும் ஒருங்கிணைத்துதொடர் போராட்டங்களில் ஈடுபட உள்ளதாகவும் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்திற்கு 'குண்டாஸ் விவசாயி' அருள் ஆறுமுகம் தலைமை தாங்கினார். தன்னாட்சி இயக்கத்தின் பொதுச்செயலாளர் சரவணன், துணைத்தலைவர் நந்தகுமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

# கோமதியம்மன் நகர் ஸ்ரீ நாகாத்தம்மன் ஸ்ரீ ஆதிவெங்கடேச பெருமாள் ஆலயத்தில் ஆடிமாத திருவிழா

செங்குன்றம், ஆக.12:

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி கோமதியம்மன் நகர் அருள்மிகு ஸ்ரீ நாகாத்தம்மன் ஸ்ரீ ஆதிவெங்கடேச பெருமாள் ஆலயத்தில் 19ஆம் ஆண்டு ஆடிமாத திருவிழா ஆலய நிர்வாகிகள் தலைவர் விஜேந்திரன், செயலாளர் செந்தில்குமார், பொருளாளர் சென்னவராயபெருமாள். துணைத்தலைவர்கள் வெங்கடேசன், விநாயகம், துணைச்செயலாளர்கள் வெங்கடேசன், சுரேஷ், ஆலய ஆலோசகர்கள் சுப்பிரமணி, சங்கர், ஆலய கௌரவ நிர்வாகிகள் லோகநாதன், சரவண மூர்த்தி, சசிதரன் உட்பட ஆலய அனைத்து நிலை நிர்வாகிகள், கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.





நிகழ்ச்சியில் கணபதி ஹோமம், அத்திவாக்கம் கோட்டூர் கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ எல்லாத்தம்மன் ஆலயத்திலிருந்து மேளதாளத்துடன் சுமார் 300க்கும் மேற்பட்ட தாய்மார்கள் தங்களது சிறசியில் பால்குடம் சுமந்தவாறு ஸ்ரீ நாகாத்தம்மன் ஸ்ரீ ஆதிவெங்கடேச பெருமாள் ஆலயத்திற்கு சென்றடைந்தனர்.

பின்னர் அம்மனுக்கு பால் அபிஷேகம்செய்துதீபாராதனை காண்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அம்மனுக்கு வண்ண மலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது.

பின்னர் பொங்கல் வைத்தல், அம்மனுக்கு காய்கனி சிறப்பு அலங்காரம், கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை போன்றவை நடைபெற்றது. இதில் ஆலயஅனைத்துநிலைபொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் அம்மன் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலாநடைபெற்றது. மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.

# செயற்கை நுண்ணறிவு துறையில் புதிய வாய்ப்புகள்: எஸ்.கே.பி. கல்லூரியில் 'Agentic AI' கருத்தரங்கு

திருவண்ணாமலை, ஆக.12

திருவண்ணாமலை எஸ்.கே.பி. கல்விக் குழுமத்தின் எஸ்.கே.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கணினி அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவுதுறை மாணவர்களுக்காக 'AGENTIC AI' என்ற தலைப்பில் ஒருநாள் கருத்தரங்கு நடைபெற்றது.






நிகழ்ச்சிக்கு எஸ்.கே.பி. கல்விக் குழுமத் தலைவர் கு.கருணாநிதி தலைமை வகித்தார். இணைச் செயலாளர் கே.வி. அரங்கசாமி, முதன்மை நிர்வாக அதிகாரி ஆர்.சக்தி கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் முனைவர் ம.முருகன் வாழ்த்துரை வழங்கினார். பி.ஆர்.ஓ. சையத் ஜஹிருத்தினும் கலந்து கொண்டார். கரூரைச் சேர்ந்த CYBERNAUT EDTECH PVT. LTD. நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி ஜெயசூர்யா ஞானவேல்சிறப்புவிருந்தினராக பங்கேற்று, செயல்பாட்டுத்திறன் கொண்ட செய ற்கை நுண்ணறிவான 'AGENTIC AI' குறித்தும், வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப உலகில் மாணவர்கள் தங்களது திறன்களை எவ்வாறு மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது குறித்தும் விளக்கமளித்தார்.

தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப மாணவர்கள் புதிய திறன்களை தொடர்ந்து கற்றுக்கொள்வதன் அவசியம் குறித்தும் கருத்தரங்கில் எடுத்துரைக்கப்பட்டது.

இதில் கணினி அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு துறை பேராசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### சென்னை வடகிழக்கு மாதவரத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள்:

# 8 அடி உயர மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி; நலத்திட்ட உதவிகள்

செங்குன்றம். ஆக12:

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 8 அடி உயர மெழுகுவத்தி ஏற்றி திமுகவினர் கொண்டாடி நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.



மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த முத்தமிழ் அறிஞர் கலைஞரின் எட்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு எதிரே எட்டு அடி உயரமுள்ள மெழுகுவர்த்தி நிறுவப்பட்டது.

மேற்படி மெழுகுவர்த்தியை பொது மக்கள் மற்றும் நிர்வாகிகள் கலைஞரின் புகழ்ஓங்குகஎன்றவாழ்த்துமுழக்கங்கள் எழுப்ப மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம் நாராயணன் மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்தார்.

பின்னர் முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு ரோஜா மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினார். பின்னர் 17வது வட்டத்திற்குட்பட்ட 200க்கும் மேற்பட்ட தாய்மார்களுக்கு சேலைகள் வழங்கப்பட்டது காலை உணவாக அறுசுவை சைவ உணவு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

இந் நிகழ்ச்சியில் திமுக நிர்வாகிகள் வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில், அவைத் தலைவர் எ. கோவிந்தராஜ், வட்டத் துணைச் செயலாளர் எஸ். பாலாஜி, பகுதி பிரதிநிதி சி. மூர்த்தி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முகப்ரியன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், எம்.ஜான்சன், இ.சுதர்சன், 17 வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் வக்கீல் எம். என்.தளபதி, எஸ். சிவக்குமார், டி. திவாகர் ஏ. ஜி. கதிரவன், எம். மைக்கேல், பி .செந்தில், இ. கார்த்திக், வி. சுமிர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்ச்சியில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.



பழநி பத்திரபதிவுத்துறை அலுவலகத்திற்கு தினசரி பொதுமக்கள்பத்திரபதிவு, வில்லங்கசான்றிதழ் போன்ற பல் வேறு பணிகளுக்காக மாவட்ட பதிவாளர் அலுவலகம், 1,2, இணைசார்பதிவாளர் அலுவலகம் என உள்ளது. மூன்று அலுவலகங்களிலும் கழிவறை தனித்தனியாக உள்ளது. மூன்று அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்களுக்காக இயற்கை உபாதைகளை கழிக்க இரண்டு கட்டியுள்ளனர் பயன் பாட்டில் இல்லை பொதுமக்கள் வெளியில் செல்வதால் சுகாதார சீர்கேடு உள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்து இயற்கை உபாதை செல்ல சீரமைத்து கொடுக்க பொதுமக்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

### தேனிமலையில் கழிவுநீர் தேக்கம்:

# தொற்று நோய் அபாயம்; ஏரி ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி மக்கள் மனு

## 976 மனுக்களை பெற்ற ஆட்சியர் வந்தனா கார்க்

திருவண்ணாமலை, ஆக.12

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர்வந்தனா கார்க் பொதுமக்களிடம் இருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை பெற்றுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் கல்வி உதவித்தொகை, வங்கிக் கடனுதவி, முதியோர் உதவித்தொகை, வீட்டுமனைப் பட்டா, சாதிச்சான்று, வேலை வாய்ப்பு, விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை மற்றும் உபகரணங்கள், சாலை வசதி, வீட்டு வசதி, வேளாண் பயிர்க்கடன், குடிநீர் வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 778 மனுக்கள் பெறப்பட்டன. மேலும், செய்யாறு சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறை தீர்வு கூட்டத்தில் 124 மனுக்களும், ஆரணி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் 74 மனுக்களும் பெறப்பட்டன. மொத்தம் 976 மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

திருவண்ணாமலை மாநகராட்சி தேனிமலை அரசு பணிமனை பின்புறம் 500க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.

இப்பகுதியில் முறையான கழிவுநீர் வடிகால் வசதி இல்லாததால், வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் சாலையில் தேங்கி துர்நாற்றம் வீசுவதுடன், சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் தெரிவித்தனர். கழிவுநீர்செல்லும்பழைய கால்வாய் அடைக்கப்பட்டு புதிய குடியிருப்பு கட்டப்பட்டுள்ளதால், கழிவுநீர் வெளியேற வழியின்றி குடியிருப்பு பகுதியில் தேங்கி வருவதாகவும்,

இதனால்தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறினர். பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகி வருவதால், கழிவுநீரைஅகற்றி நிரந்தர தீர்வு காண வேண்டும் என ஆட்சியரிடம் கோரிக்கை விடுத்தனர்.



இதேபோல், பூதமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் அளித்த மனுவில், மன்னம்பட்டி கிராமத்தில் உள்ள ஏரியில் சிலருக்கு முறைகேடாக வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படும் பட்டாக்களை ரத்து செய்து, ஏரி மற்றும் நீர்வரத்து கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

மனுவை பெற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க், புகார் குறித்து விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 7 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.77,201 மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார். மேலும், சமூக நீதித்துறை சார்பில் சத்தியராஜ் என்பவருக்கு திருவண்ணா மலை சமூக நீதி கல்லூரி மாணவர் விடுதியில் சமையலராக கருணை அடிப்படையில் பணிநியமன ஆணையும் வழங்கப்பட்டது.

முன்னதாக, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு வைப்பறையை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அ.சிவசுப்பிரமணியன் மற்றும் பல்வேறு துறை அரசுஅலுவலர்கள்கலந்து கொண்டனர்.

### மக்களவை தொகுதி மறுசீராய்வு மசோதாவுக்கு எதிர்ப்பு:

# தூத்துக்குடியில் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் நடைபயணம்

தூத்துக்குடி, ஆக12

மக்களவை தொகுதி மறுசீராய்வு (DELIMITATION) மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, தூத்துக்குடி மாநகர மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் நடைபயணம் நடைபெற்றது.

தூத்துக்குடி பழைய நகராட்சி அலுவலகம் அருகில் தொடங்கிய இந்த நடைபயணம், ஒன்றாம் கேட் பகுதியில் உள்ள மகாத்மா காந்தி சிலை வரை நடைபெற்றது.

நடைபயணத்திற்கு மாவட்ட மாநகர காங்கிரஸ் தலைவர் சகாயராஜ் தலைமை வகித்தார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டேனியல்ராஜ், சுடலையாண்டி, மாமன்ற உறுப்பினர் கற்பகவள்ளி சேகர், மாநில பேச்சாளர் அப்துல் மஜீத், மாவட்ட சிறுபான்மை பிரிவு தலைவர் மைதீன், மாநகர கிழக்கு மண்டல தலைவர் ஜசைஸ் செல்வா, எஸ்.சி./எஸ்.டி. மாவட்ட தலைவர் பிரபாகர், மாவட்ட காங்கிரஸ் நிர்வாகி சுரேஷ் பர்ணாரந்து உள்ளிட்ட ஏராளமான காங்கிரஸ் நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

"மக்களவை தொகுதி மறுசீராய்வு மூலம் தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படும்" நடைபயணத்தின் போது காங்கிரஸ் நிர்வாகிகள் பேசுகையில், "மோடிலிமிட்டேஷன் (MODILIMITATION) என்பது இந்தியாவின் இறையாண்மை யையும் கூட்டாட்சி முறையையும் சீர்குலைக்கும் அரசியல் முயற்சி" என குற்றம் சாட்டினர்.

மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கையை மக்கள் தொகை அடிப்படையில் மறுசீராய்வு செய்வதற்கான முயற்சியால், மக்கள்தொகையை கட்டுப்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு பங்களித்த தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் அரசியல் பிரதிநிதித்துவத்தில் பாதிக்கப்படும் என்றும், மக்கள் தொகை கட்டுப்பாட்டில் பின்தங்கிய மாநிலங்களுக்கு கூடுதல் பிரதிநிதித்துவம் கிடைக்கும் சூழல் உருவாகும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும், தொகுதிகளின் எண்ணிக்கையை 50 சதவீதம் வரை உயர்த்தும் வகையில் மறுசீராய்வு செய்யப்பட்டால், உத்தரப்பிரதேசத்தின் மக்களவை தொகுதிகள் 80ல் இருந்து 120 ஆகவும், தமிழ்நாட்டின் தொகுதிகள் 39ல் இருந்து 59 ஆகவும் அதிகரிக்கக்கூடும் எனக் குறிப்பிட்ட அவர்கள், இதன் மூலம் இரு மாநிலங்களுக்கிடையேயான தொகுதி எண்ணிக்கை இடைவெளி மேலும் அதிகரிக்கும் என தெரிவித்தனர்.




"தமிழ்நாட்டின் அரசியல் அதிகாரம் பறிபோகும்" நாடாளுமன்றத்தில் எண்களின் பலமே முக்கிய முடிவுகளை தீர்மானிக்கும் நிலையில், தென் மாநிலங்களின் மக்களவை பிரதிநிதித்துவம் குறையும் வகையில் தொகுதி மறுசீராய்வு மேற்கொள்ளப்பட்டால், தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் அரசியல் அதிகாரம் நிரந்தரமாக பாதிக்கப்படும் என்றும் காங்கிரஸ் நிர்வாகிகள் கூறினர்.

மக்கள்தொகைகட்டுப்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் கடந்த காலங்களில் மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கை முடக்கப்பட்டதாகவும், அந்த பாதுகாப்பை அகற்றும் முயற்சியே தற்போது நடைபெறுவதாகவும் அவர்கள் குற்றம்சாட்டினர்.

"சாதிவாரி கணக்கெடுப்புக்குப் பிறகே தொகுதி மறுசீராய்வு" சாதிவாரி கணக்கெடுப்பு உள்ளிட்ட தேவையான தரவுகள் முழுமையாகப் பெறப்படுவதற்கு முன்பாக தொகுதி மறுசீராய்வு மேற்கொள்ளப்பட்டால், பட்டியலினத்தவர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான இடஒதுக்கீடு தொகுதிகளை முறையாக நிர்ணயிப்பதில் சிக்கல் ஏற்படும் என்றும் காங்கிரஸ் தரப்பினர் தெரிவித்தனர்.

"தமிழ்நாட்டின் சுயமரியாதை, அரசியல் உரிமை மற்றும் ஜனநாயக பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கவே இந்தநடைபயணம் நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டின் அரசியல் உரிமைகளை எவராலும் பறிக்க முடியாது. மாநிலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு தொகுதி மறுசீராய்வு நடவடிக்கையையும் எதிர்த்து தொடர்ந்து குரல் கொடுப்போம்" என அவர்கள் தெரிவித்தனர். மேலும், "தமிழ்நாட்டின் நலனுக்கும், தென் மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் தொகுதி மறுசீராய்வு செய்யக்கூடாது. தமிழ்நாட்டிற்கு துரோகம் இழைக்கும் வகையிலான எந்த முயற்சியையும் முறியடிக்க வேண்டும்" என நடைபயணத்தில் வலியுறுத்தப்பட்டது.

வெள்ளையனே வெளியேறு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற இந்த நடைபயணம், 'QUIT UN FAIR DELIMITATION MARCH' என்ற பெயரில் நடைபெற்றதாக காங்கிரஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# சமூக செயற்பாட்டாளர் பத்திரிகையாளர் லயன் நண்பன் எம்.முகம்மது அபுபக்கருக்கு அயோத்தி தாசர் விருது



செங்குன்றம், ஆக12:

சென்னை புழல் காவாங்கரை பகுதியில் அமைந்துள்ள அம்பேத்கர் இரவு பாடசாலை அரங்கில் அறிவர் அம்பேத்கர் சிந்தனை களம் சார்பில் ஐம்பெரும் விழா நடைபெற்றது. இவ்விழாவை சமூக ஆர்வலரும் அறிவர் அம்பேத்கர் சிந்தனை களத்தில் ஒருங்கிணைப்பாளருமான சுடர்மாவளவன் ஏற்பாட்டில் நடைபெற்ற விழாவில் வேர்ல்ட் விஷன் பவுண்டேஷன் கௌரவ தலைவர் தேவ அன்பு, இரட்டைமலை சீனிவாசன் அயோத்திதாசர் பண்டிதர் பேத்தியும் செட்யூல்டு வகுப்பின் ஐக்கிய முன்னணி ரேவதி நாகராசன், நந்தனம் கலைக் கல்லூரியின் பேராசிரியர் ஜெயபாலன், ரியல் டிரஸ்ட் இயக்குனர் லாரன்ஸ், தமிழ்நாடு மின்சாரத்துறை கிண்டி உதவி பொறியாளர் காட்டூர் நாதன், திருநங்கை சகோதரன் அமைப்பின் பொதுச் செயலாளர் ஜெயா, வேர்ல்ட் விஷன் பவுண்டேஷனின் ஒருங்கிணைப்பாளர் திருநங்கை ஸ்ரீமதி ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 100க்கும் மேற்பட்டோருக்கு விருதுகளை வழங்கினர்.

10 மற்றும் 12 ஆம் பொதுத்தேர்வில் உயர் மதிப்பெண் பெறுவதற்காக ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சியையும், ஏழை எளிய மக்கள் இலவசமாக உயர்தர மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக ஆண்டுதோறும் மருத்துவ முகாம்களையும், மரங்கள், பனை விதைகளை நட்டும் பராமரித்தும், விதைப் பந்துகளை மாணவ மாணவிகளிடையேயும், பொதுமக்களிடையேயும் இலவசமாக வழங்கி வருபவரும், போதை போக்குவரத்து விழிப்பு உணர்வு பேரணிகளை ஆண்டுதோறும் நடத்தி வருபவருமானசென்னை சோசியல் லயன்ஸ் சங்கத்தின் மாவட்டத் தலைவரும், ரெட்ஹில்ஸ் நண்பன் இதழின் ஆசிரியரும் சமூக செயற்பாட்டாளரும் இயற்கை, சுற்றுச்சூழல் ஆர்வலருமான நண்பன் எம்.முகம்மது அபுபக்கருக்கு அயோத்தி தாசர் விருதை வழங்கி கௌரவித்தனர். ஐம்பெரும் விழாவில் சுமார் இருநூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்

### ஆவடி காவல் ஆணையரகத்தில் சுமார் 291 வழக்குகளில் கைப்பற்றப்பட்டுள்ள

# சுமார் 1215 கிலோ கஞ்சா, 7250 போதை மாத்திரைகள் மற்றும் 11 வழக்குகளில் பறிமுதல்

## 982.75 கிலோ குட்கா பொருட்கள் எரித்து அழிக்கப்பட்டது

ஆவடி, ஆகஸ்ட் 12:

ஆவடி காவல் ஆணையகத்தில் சுமார் 291 வழக்குகளில் கைப்பற்றப்பட்டுள்ள சுமார் 1215 கிலோ கஞ்சா, 7250 போதை மாத்திரைகள் மற்றும் 11 வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட 982.75 கிலோ குட்கா பொருட்கள் எரித்து அழிக்கப்பட்டது






ஆவடி காவல் ஆணையரகத்திற்குட்பட்ட பகுதிகளில் கைப்பற்றப்பட்ட கஞ்சாவினை அழிக்க, ஆவடி மாநகர காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார் உத்திரவின் படி ஆவடி மாநகர காவல் இணை ஆணையாளர் டாக்டர் ஆர்.சிவகுமார், ஆவடி காவல் மாவட்ட காவல் துணை ஆணையாளர் வி.வினோத் சாந்தாராம், தடய அறிவியல் உதவி இயக்குநர் விஜயலட்சுமி ஆகியோர்கள் கொண்ட போதை பொருள் அழிப்பதற்கான குழு அமைக்கப்பட்டது.

இந்நிலையில் ஆவடி காவல் ஆணையரகத்திற்குட்பட்ட காவல் நிலையங்கள் மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகளில் சுமார் 291 வழக்குகளில் கைப்பற்றப்பட்டுள்ள சுமார் 1215 கிலோ கஞ்சா, சுமார் 7250 போதை மாத்திரைகள்மற்றும் ஆவடி காவல் மாவட்டத்தில் 11 வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட சுமார் 982.75 கிலோ குட்கா மற்றும் புகையிலை பொருட்கள் உள்ளிட்டவை நீதிமன்றத்தின் மூலம் அழிப்பதற்கான ஆணை பெறப்பட்டு செங்கல் பட்டு மாவட்டம், தென் மேல்பாக்கம் என்ற இடத்தில் உள்ள G.J. MULTICLAVE INDIA PVT. LIMITED என்ற நிறுவனத்தில் உள்ள INSULATORல் ஆவடி மாநகர காவல் இணை ஆணையாளர் டாக்டர் அர். சிவகுமார் கொண்ட மேற்படி குழுவினர், ஆவடி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு உதவி ஆணையாளர் கலியசுந்தரம் ஆகியோர் முன்னிலையில் எரித்து அழிக்கப்பட்டது.

ஆவடி காவல் ஆணையரகத்தில் கடந்த 2025ம் ஆண்டில் இருந்து இதுவரை 921 வழக்குகளில் சுமார் 4405 கிலோ கிராம் எடை கொண்ட கஞ்சா எரித்து அழிக்கப்பட்டது.

# 2,025 மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள்: செய்யாறில் சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின் வழங்கினார்

செய்யாறு, ஆக.12

தேசிய குடற்புழு நீக்க நாளையொட்டி செய்யாறு அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளியில் 2,025 மாணவிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின் வழங்கினார்.



நிகழ்ச்சியில் சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின் மாணவிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்கி, அதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

1 முதல் 19 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்குவதன் மூலம் குடற்புழு தொற்று கட்டுப்படுத்தப்படுவதுடன், ரத்தசோகை, உடல் சோர்வு உள்ளிட்ட பாதிப்புகள் குறைந்து, குழந்தைகளின் உடல் வளர்ச்சி மற்றும் ஆரோக்கியம் மேம்பட உதவும் என தெரிவிக்கப்பட்டது.

மாணவ, மாணவிகள் தவறாமல் குடற்புழு நீக்க மாத்திரைகளை உட்கொண்டு, ஆரோக்கியமான வாழ்க்கையை கடைப்பிடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள், மாணவிகள் மற்றும் சுகாதாரத்துறை பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அறிவர் அம்பேத்கர் சிந்தனை களம் சார்பில் ஐம்பெரும் விழா

செங்குன்றம், ஆக12:

சென்னை புழல் காவாங்கரை பகுதியில் அமைந்துள்ள அம்பேத்கர் இரவு பாடசாலை அரங்கில் அறிவர் அம்பேத்கர் சிந்தனை களம் சார்பில் ஐம்பெரும் விழா நடைபெற்றது. இவ்விழாவை சமூக ஆர்வலரும் அறிவர் அம்பேத்கர் சிந்தனை களத்தில் ஒருங்கிணைப்பாளருமான சுடர்மா வளவன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.



வேர்ல்ட் விஷன் பவுண்டேஷன் கௌரவ தலைவர் தேவ அன்பு, இரட்டைமலை சீனிவாசன் அயோத்திதாசர் பண்டிதர் பேத்தியும் செட்யூல்டு வகுப்பின் ஐக்கிய முன்னணி ரேவதி நாகராசன், நந்தனம் கலைக் கல்லூரியின் பேராசிரியர்ஜெயபாலன், ரியல்டிரஸ்ட் இயக்குனர் லாரன்ஸ், தமிழ்நாடு மின்சாரத்துறை கிண்டி உதவி பொறியாளர் காட்டூர் நாதன், திருநங்கை சகோதரன் அமைப்பின் பொதுச் செயலாளர் ஜெயா, வேர்ல்ட் விஷன் பவுண்டேஷனின் ஒருங்கிணைப்பாளர் திருநங்கை ஸ்ரீமதி ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விருதுகளை வழங்கி கௌரவித்தனர். புழல் டாக்டர் எம். ஜி.ஆர் இலவச கணினி பயிற்சி மைய நிறுவனரும் 24வது மேற்கு வட்ட அதிமுக செயலாளருமான லயன் டாக்டர் புழல் எஸ்.விஜயனுக்கு டாக்டர் பிஆர். அம்பேத்கர் சுடர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அறிவர் அம்பேத்கர் சிந்தனை களம் நடத்திய ஐம்பெரும் விழாவில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட சமூக ஆர்வலர்கள், சமூக சிந்தனையாளர்கள், செய்தியாளர்கள், ஊடகநண்பர்கள்,அரசியல்பிரமுகர்கள் எனபல்வேறுதுறைகளில்சமூகசேவை ஆற்றிய நண்பர்கள் அனைவருக்கும் பல்வேறு தலைவர்களின் பெயர்களில் விருதுகள் வழங்கப்பட்டன

ஐம்பெரும் விழாவில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்



### செய்யாறு அருகே

# பெட்டிக்கடையில் பதுக்கி வைத்திருந்த 15 கிலோ குட்கா பறிமுதல்; வியாபாரி கைது

செய்யாறு, ஆக.12

செய்யாறுஅருகேபெட்டிக்கடையில்விற்பனைக்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 15 கிலோ தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் புகையிலைப் பொருட்களை போலீசார்பறிமுதல் செய்து, கடை வியாபாரியை கைது செய்தனர்.

செய்யாறு அருகே தொழிப்பேடு கிராமத்தில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, செய்யாறு காவல் உதவி ஆய்வாளர் வரதராஜ் தலைமையிலான போலீசார் அப்பகுதியில் தீவிர ரோந்து மற்றும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது ஆற்றங்கரை தெருவில் உள்ள ஒரு பெட்டிக்கடையில் சந்தேகத்தின் பேரில் போலீசார் சோதனை நடத்தினர். இதில், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் புகையிலைப் பொருட்கள் விற்பனைக்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது.

இதையடுத்து, சுமார் 15 கிலோ எடையுள்ள குட்கா மற்றும் புகையிலைப் பொருட்களை போலீசார் பறிமுதல் செய்தனர். தொடர்ந்து வழக்குப்பதிவு செய்து, பெட்டிக்கடை வியாபாரியான ஆர்த்தியப்பன் (39) என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# விவசாயிகள் குறைகளை நேரில் கேட்கும் கலெக்டர்: ஆக.20ல் குறைதீர்வு கூட்டம்

திருவண்ணாமலை, ஆக.112

திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகளின் குறைகள் மற்றும் கோரிக்கைகளை நேரில் கேட்டறிந்து தீர்வு காணும் வகையில், ஆகஸ்ட் மாத விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் வரும் 20ந் தேதி (வியாழக்கிழமை) காலை 10.30 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற உள்ளது. மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகம், வேளாண் பொறியியல், கால்நடை பராமரிப்பு, கூட்டுறவு, வருவாய் உள்ளிட்ட துறைகளின் அலுவலர்கள் மற்றும் வங்கி அதிகாரிகள் பங்கேற்க உள்ளனர்.



கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகள் மற்றும் குறைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் பதிலளித்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள உள்ளனர். எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்தவிவசாயிகள்மற்றும்விவசாயசங்கப்பிரதிநிதிகள் கூட்டத்தில் பங்கேற்று தங்களது பொதுக் கோரிக்கைகளை நேரில் தெரிவிப்பதுடன், தனிநபர் குறைகள் தொடர்பான மனுக்களையும் அளித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டுள்ளார்.



காவிரியில் இருந்து தமிழகத்துக்கு 15 நாட்களுக்கு தினமும் 12 ஆயிரம் கன அடி நீரை கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும் என்று காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

# தவெக நல்லாட்சி சிறக்க தூத்துக்குடி புறநகர் மாவட்ட மகளிர் அணி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட கேக்வெட்டும் நிகழ்ச்சி

## அமைச்சர் மதன் ராஜா கலந்துகொண்டு கேக் வெட்டி அனைவருக்கும் கேக் வழங்கினார்

தூத்துக்குடி, ஆக.12

தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையில் தவெக நல்லாட்சி சிறக்க தூத்துக்குடி புறநகர்மாவட்ட மகளிர்அணி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட கேக்வெட்டும் நிகழ்ச்சியில் அமைச்சர் மதன் ராஜா கலந்து கொண்டு கேக் வெட்டி அனைவருக்கும் கேக் வழங்கினார்



தூத்துக்குடி புறநகர் மாவட்ட ஓட்டப்பிடாரத்தில்தமிழகமுதலமைச்சர் ஜோசப் விஜய் யின் மக்கள் போற்றும் நல்லாட்சி சிறக்க புறநகர் மாவட்ட செயலாளர் வனிதா கந்தசாமி, ஏற்பாட்டில் மாவட்ட மகளிர் அணி இணைச்செயலாளர்கள் ராமகிருஷ்ணம்மாள், காளியம்மாள், பிரியதர்ஷினி, சுகன்யா, ஆகியோர் முன்னிலையில் நடந்த கேக் வெட்டும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தூத்துக்குடி புறநகர் மாவட்ட செயலாளரும் சிறு குறு தொழில்துறை அமைச்சருமான மதன் ராஜா கேக் வெட்டி மகளிர்அணியை சேர்ந்த அனைவருக்கும் கேக். வழங்கினார்.இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி புறநகர் தவெக மாவட்ட மகளிர் அணி செயலாளர் வனிதா கந்தசாமி தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட மகளிர் அணியினர் நிகழ்ச்சிகள் கலந்து கொண்டனர்.

### மாதவரத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள்:

# செல்டர் குழந்தைகள் காப்பகத்தில் நலத்திட்ட உதவிகள்

செங்குன்றம், ஆக 12:

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சென்டர் குழந்தைகள் காப்பகத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த முத்தமிழ் அறிஞர் கலைஞரின் எட்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் குழந்தைகள் காப்பகத்தில் உள்ள ஆசிரியர்கள், குழந்தைகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

பின்னர் சென்டர் குழந்தைகள் காப்பதத்தில் வசிக்கும் குழந்தைகளுக்கு அறுசுவை காலை உணவு மற்றும் நோட்டு புத்தகம் போன்ற நலத்திட்ட உதவிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார்.

17வது வட்டச்செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்ச்சியில் அவைத் தலைவர் எ. கோவிந்தராஜ், வட்டத் துணைச் செயலாளர் எஸ்.பாலாஜி, பகுதி பிரதிநிதி சி. மூர்த்தி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முகப்ரியன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், எம்.ஜான்சன், இ. சுதர்சன், 17 வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் வக்கீல் எம். என்.தளபதி, எஸ். சிவக்குமார், டி. திவாகர் ஏ. ஜி. கதிரவன், எம். மைக்கேல், பி .செந்தில், இ. கார்த்திக், வி. சுமிர், எம். கோவிந்தன், ஜி. முணிவேல், எஸ். கமலநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.




இந்த நிகழ்ச்சியில் பேரறிஞர்பெருந்தகைஅண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.

# "போதைக்கு எதிராக ஒன்றிணைவோம்" - செய்யாறில் மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி

செய்யாறு, ஆக.12

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் போதைப்பொருள் பயன்பாட்டுக்கு எதிராக பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

செய்யாறு சார் ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து தொடங்கிய பேரணிக்கு சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின் தலைமை தாங்கினார். பேரணி வட்டாட்சியர் அலுவலகம், எஸ்.பி.ஐ. வங்கி, பேருந்து நிலையம், பழைய காஞ்சிபுரம் சாலை வழியாக சென்று அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நிறைவடைந்தது.





பேரணியில் பங்கேற்ற மாணவர்கள் போதைப் பொருளால் ஏற்படும் உடல் மற்றும் சமூக பாதிப்புகள் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பதாகைகளை ஏந்திச் சென்றனர். மேலும், போதைப்பொருள் பயன்பாட்டை தவிர்க்க வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு கோஷங்களை எழுப்பினர்.

அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருவோத்தூர் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள், என்.எஸ்.எஸ். மற்றும் என்.சி.சி. மாணவர்கள், பள்ளி தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்டோர் பேரணியில் கலந்து கொண்டனர்.

இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகாமல் கல்வி, விளையாட்டு உள்ளிட்ட ஆரோக்கியமான செயல்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்ற விழிப்புணர்வுசெய்தியைபேரணி மூலம் பொதுமக்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA